**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் .**

**O.S. No.68/2019**

28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை **வாதி தரப்பு** சாட்சியாக **வா.சா. 3** ன் வாக்குமூலம், (1969 ம் ஆண்டின் 54-வது விதியின் 95 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.எம்.விஜயா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி** செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | வைரவேல் | **வயது** |
| **த.பெ./க.பெ.** | துரைராஜ் | **தொழில்** |
| **ஊர்** | : | **மாவட்டம்** |
| **வட்டம்** | : | |

**<u>முதல் விசாரணை</u>**

எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பட்டது அதன் பேரில் சாட்சி சொல்கிறேன். எனக்கு இந்த வழக்கின் பிரதிவாதிகளான கோவிந்தராஜ் மற்றும் சதானந்தபதி ஆகியோர்களை தெரியும். அவர்கள் இருவரும் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளார்கள். கோவிந்தராஜின் மனைவி தான் சதானந்தபதி. வாசாஆ 1 ல் உள்ள எழுதியது உட்பட என்ற காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 2018 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் கோவிந்தராஜ்-ம் சதானந்தபதியும் அவர்களுக்கு தெரிந்த வீரமுண்டான் குடிகாட்டைச்சேர்ந்த முருகேசன் என்பவரிடம் குடும்பசெலவிற்காக பணம் கேட்டதாக சொன்னார்கள். பணம் தயாரானதும் கூப்பிடுகிறேன் போன் செய்கிறேன் நீங்களும் வாருங்கள் என்று என்னிடம் சொன்னார்கள். யார் பணம் தயார்செய்வதாக சொன்னார்

என்றால் முருகேசன் பணம் தயார் செய்வதாக சொன்னார். 28.08.2018ம் தேதி மாலை

எனக்கு கோவிந்தராஜ் போன் செய்து மறுநாள் 29ம் தேதி காலையில் பணம் வாங்கப்போவதாகவும் வீரமுண்டான் குடிகாட்டிற்கு சென்று பணம் வாங்கி வரலாம் நீங்களும் வாருங்கள் என்றார். 29ம் தேதி காலை எனக்கு கொஞ்சம் வேலை இருந்ததால் நீங்கள் முன்னாடி போங்கள் நான் பின்னாடி வருகிறேன் என்று சொன்னேன். 29.08.2018 அன்று கோவிந்தராஜ் எனக்கு போன் செய்து வீரமுண்டான் குடிகாட்டிற்கு வரவேண்டாம் என்றும் மூக்கப்பஉடையான் பள்ளத்திற்கு நாங்கள் வந்துவிடுகிறோம் நீங்களும் வந்துவிடுங்கள் என்றார். நான் மூக்கப்பஉடையான் பள்ளத்திற்கு சென்றபோது அங்கு கோவிந்தராஜ் சதானந்தபதி, அவர்கள் வீட்டிற்கு எதிரே இருக்கும் சிங்காரவேல் என்று சாட்சி மற்றும் முருகேசன் ஆகியோர் அங்கு இருந்தார்கள் அப்போது கோவிந்தராஜ் முருகேசனை எனக்கு அறிமுகப்படுத்தினார். என்னிடம் கோவிந்தராஜ் நீங்கள் வர லேட் ஆகிவிட்டது. நானும் சதானந்தபதியும் முருகேசனிடம் பணம் வாங்கி கொண்டோம் நீங்கள் நோட்டை எழுதிவிட்டீர்கள் என்றால் கிளம்பலாம் என்றார். ரூ12,00,000/-(12 இலட்சம்) வாங்கியதாக சொல்லி என்னிடம் பணத்தை காண்பித்தார்கள். புரோநோட்டை எடுத்து கோவிந்தராஜ் என்னிடம் கொடுத்து எழுதுங்கப்பா என்றார். முருகேசனிடம் அவரது விலாசத்தையும் பிரதிவாதிகளிடம் அவர்களது விலாசத்தையும் கேட்டு வாங்கி ஒரு நோட்டில் எழுதிக்கொண்டு அதன்பின்னர் புரோநோட்டில் அவற்றை எழுதினேன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 1 புரோநோட்டு நான்எழுதியதுதான். அந்த புரோநோட்டை 29.08.2018ம் தேதியில் எழுதினேன். அதில் முதலில் கோவிந்தராஜிடம் கையெழுத்து வாங்கினேன். பிறகு சதானந்தபதியிடம் கையெழுத்து வாங்கினேன். அதன்பிறகு சாட்சி சிங்காரவேலிடம் கையெழுத்து வாங்கினேன். நான் வந்த பிறகு அங்கு வந்த ராஜா என்ற சாட்சியிடமும் புரோநோட்டில் கையெழுத்து வாங்கினேன். பிறகு நான் எழுதியது சாட்சி உள்பட என கையெழுத்திட்டேன். மேற்சொன்ன விவரங்கள் அனைத்தும் நேரடியாக தெரியும் நான்தான் புரோநோட்டை எழுதினேன். அதன்பிறகு நான் வல்லத்தில் ஒருமுறை பிரதிவாதிகளை சந்தித்தபோது வாங்கிய பணத்தை கொடுத்தாச்சா என்று கேட்டேன். இன்னும் கொடுக்கவில்லை பணம் ரெடி பண்ணி கொடுத்துவிடுவோம் என்று கோவிந்தராஜ் சொன்னார். அதன்பிறகு தஞ்சாவூரில் ஒருமுறை அவரை பார்த்தபோது

பணம் கொடுத்தாச்சா என்று கேட்டேன். அப்போதும் இன்னும் பணம் கொடுக்கவில்லை பணம் ரெடி பண்ணி கொடுத்துவிடுவோம் என்று சொன்னார்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்/-) A. மலர்விழி,

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**